

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் அம்பத்தூர் கிழக்கு பகுதியில் முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா டி.ஆர். பாலு எம்பி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.பாலமுருகன் தலைமையில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா ஆகியோர் உரையாற்றி வருகைதந்த 1000 ததிற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர். இதில் மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி எம்.சி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .மா.சுப்பிரமணியன், முன்னிலையில் அரசு வேலூர் பென்ட்லேண்ட் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு ஐடிபிஐ வங்கியின் பெரு நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தில் (CSR) ரூ.20 இலட்சம் மதிப்பில் மொபைல் எக்ஸ்ரே கருவி மற்றும் வாகனத்தை வங்கியின் துணை பொது மேலாளர் திருமதி ரேவதி ஜெயபாலாஜி, மண்டல விற்பனை மேலாளர் .சுரேஷ் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ரோகிணிதேவி உட்பட பலர் உடனிருந்தனர்

விண்வெளி – பாதுகாப்புத் தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாட்டில் பங்கேற்க இன்று நந்தம்பாக்கம் வருகை தரும்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

**நந்தம்பாக்கம், அக்.7-**

**நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (7.10.2025) காலை நடைபெறும் விண்வெளி-பாதுகாப்பு தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாட்டில் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று காலை 9 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

இன்று 7ஆம் தேதி காலை 9.30 மணி அளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் விண்வெளி-பாதுகாப்பு தொழில்களுக்கான சர்வதேச வணிக மாநாடு நடைபெறவுள்ளது.



இந்த மாநாட்டிற்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவிற்கு வருகைதரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன் மெண்ட் அண்ணா சிலை அருகில் இன்று காலை 9 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமை செயற் குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் காலை 9.00 மணிக்கெல்லாம் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

மாநில திட்டக்குழு தமிழ்நாடு நிலப் பயன்பாடு 2025:

# வளம் குன்றா எதிர்காலத்திற்கான ஆராய்ச்சி - புத்தாக்க சர்வதேச மாநாடு!

## தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவக்கி வைத்தார்!

சென்னை, அக். 7 -

மாநில திட்டக்குழுவின் தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் (Tamil Nadu State Land Use Research Board) மற்றும் ஆளுகைக்கான புத்தாக்க மையம் ( Centre for Innovation in Governance) இணைந்து, "தமிழ்நாடு நிலப்பயன்பாடு 2025 : வளம்குன்றா எதிர்காலத்திற்கான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்" என்ற தலைப்பில் அக்டோபர் 6 மற்றும் 7, 2025 ஆகிய தேதிகளில் சென்னை தரமணியில் உள்ள ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவில் சர்வதேச மாநாடு நடத்தப் பெறுகிறது.

இம்மாநாட்டை நேற்று (அக்டோபர் 6, 2025) தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா துவக்கி வைத்தார். நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் 15 ஆண்டு களின் பங்களிப்புகளை பிரதிபலிக்கும் ஒரு தொகுப்பான "தமிழ்நாட்டில் நில பயன்பாட்டு ஆராய்ச்சி", நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரிய நிதியுதவியுடன் சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையத்தால் மேற்கொள்ளப்பட்ட "வடுவூர் பறவைகளின் நிலப்பரப்பு" ஆகிய இரு அறிக்கைகளை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

அமைச்சர் அவர்கள் தனது உரையில், அழிந்துவரும் சூழ்நிலையில் உள்ள பறவை இனமான கௌதாரி, பூச்சிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பறவை இனங்கள், கால்நடைகள் மற்றும் காட்டு முயல்கள் பற்றிய ஆராய்ச்சியின் அவசியத்தையும், தமிழ்நாட்டை அறிவியல் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாக மாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். அவர், தமிழ்நாட்டில் 1975 ல் துவங்க ப்பட்ட நிலப்பயன்பாடு வாரியத்தின் பணிகளையும், 2011 ல் நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியமாக மாற்றப்பட்ட பின் அதன் பணிகளையும் எடுத்துரைத்தார், மேலும், பல்வேறு ஆராய்வாளர்களை ஒன்றிணைத்தும், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளான SDG 11, 13 &15 ஆகியவற்றை எய்தும் வகையிலும் இம்மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மேலும், அமைச்சர் அவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும், கல்வி நிறுவனங்களிடமிருந்தும் வரப்பெற்ற புதிய ஆராய்வு கருத்துக்களை வெளிப்படுத்தும் விளக்கக் காட்சி அமர்வினையும் துவக்கி வைத்தார்.

மாநிலத் திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் டாக்டர் . ஜெ. ஜெயரஞ்சன் தனது உரையில், நில பயன்பாட்டு ஆராய்ச்சிக்காக இந்தியாவிலேயே பிரத்யேகமான வாரியத்தை தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் மட்டுமே கொண்டுள்ளன, அவை ஆராய்ச்சி ஆய்வுகள் மூலம் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன எனவும் குறிப்பிட்டார். மேலும் தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தால் (TNSLURB) தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு வெப்ப தணிப்பு உத்தி அறிக்கையின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, "வெப்ப அலைகளை மாநிலத்தின் குறிப்பிட்ட பேரிடராக" அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்ததை, இத்தகைய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளில் மாநிலம் எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான ஒரு உதாரணமாக மேற்கோள் காட்டினார்.

சஜ்ஜன்சிங் ஆர். சவான், அரசு செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை அவர்கள் சிறப்புரை யையும், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி. சுதா எஸ்., துவக்க உரையையும் நிகழ்த்தினர்.

நிலையான நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல், ஒருங்கிணைந்த வள மேலாண்மை மற்றும் மீள்தன்மை தொடர்பான பல்வேறு கருப்பொருள்களின் கீழ் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்த விவாதங்களில், மாநில திட்டக்குழுவின் முழுநேர உறுப்பினர் மற்றும் உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த கொள்கை வகுப்பாளர்கள், கல்வி வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

நகர்ப்புற மற்றும் தொழில் துறை மேம்பாடு, விவசாயம், நீர் மற்றும் நில மேலாண்மை, சுற்றுலா, எரிசக்தி மாற்றங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றும் புவிசார் தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஏழு கருப்பொருள் குறித்த அமர்வுகளில் விவாதங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு அமர்விலும் தலைமை உரைகள், சிறந்த நடைமுறை விளக்கக் காட்சிகள், ஆராய்ச்சிக் கட்டுரை விளக்கக்காட்சிகள், குழு விவாதங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் ஆகியவை நடைபெறுகின்றன.

நகர்ப்புற மேம்பாடு, விவசாயம், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த கருப்பொருள் அமர்வுகளில் அன்ஷுல் மிஸ்ரா, ககன்தீப் சிங் பேடி, டாக்டர் வி. திருப்புகழ், (ஓய்வு), மற்றும் சுப்ரதோ பால், UNDP ஆகியோர் கலந்து கொண்டு தலைமை உரையாற்றினர்.

இன்றைய மாநாட்டில், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த 150 நிறுவனங்களி லிருந்து, 800க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு School of Sustainability IIT Madras and the World Resources Institute (WRI) India ஆகிய கல்வி மற்றும் அறிவுசார் நிறுவ னங்களுடனும் கருப்பொருள் சார்ந்த பணிக்குழுவுடனும் இணைந்து மாநில திட்டக்குழுவால் நடத்தப்படுகிறது.

இம்மாநாடு இரண்டாவது நாளாக அக்டோபர் 7, 2025 அன்றும் சுற்றுலா, எரிசக்தி மற்றும் புவிசார் தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்த கருப்பொருள் அமர்வுகளுடன் தொடர்ந்து நடைபெற உள்ளது.




சென்னை, தரமணி இந்திய தொழில்நுட்ப கழக கூட்டரங்கில் நேற்று (06.10.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர். பி. ராஜா தமிழ்நாடு அரசின் மாநில திட்டக் குழு சார்பில் நடைபெறும் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்து, "தமிழ்நாட்டில் நில பயன்பாட்டு ஆராய்ச்சி (TAMIL NADU LANDUSE 2025) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர். சஜ்ஜன்சிங் ரா சவான், மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) திருமதி எஸ். சுதா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் – தமிழ்நாட்டில் உள்ள

# 4 உயிரியல் பூங்காங்களுக்கு ரூ 35 கோடி நிதி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒப்புதல்!

**சென்னை, அக்.7-**

**தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள 4 உயிரியல் பூங்காக் களுக்கு ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் 22-வது ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநிலம் முழுவதும் உள்ள 4 உயிரியல் பூங்காக்களின் விரிவான மேம்பாட்டுக்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், 4 உயிரியல் பூங்காக்களின் அடிப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், விலங்குகளின் நலனை மேம்படுத்துதல் மற்றும் பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துதல் தொடர்பான தற்போதைய முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களை ஆய்வு செய்தார்.

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, ஏற்கனவே அதன் மின்சாரத் தேவையில் 80 சதவிகிதத்தை சூரிய மின்சக்தியின் மூலம் பூர்த்தி செய்து வருகிறது. முழுமையான கார்பன் நடுநிலைமையை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாட்டின் உயிரியல் பூங்காக்கள் அணுகல் தன்மை, மின்னணு மயமாக்கம் மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளன.

### உயிரியல் பூங்காக்களின் சிறப்பம்சங்கள்

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், 180 கிலோ வாட் (KW) சூரிய சக்தி மின் நிலையம் நிறுவப்பட்டு, பறவைகள் சரணாலயம் மற்றும் இரவு நேர விலங்குகள் இல்லம் புதுப்பிக்கப் பட்டு, மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக சாய்வு தளங்கள் (ramps), வழுக்காத ஓடுகள் (anti-skid tiles) அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 90 சதவிகித த்திற்கும் அதிகமான நுழைவுச்சீட்டு விற்பனை UPI, இணையவழி மற்றும் Whatsapp வழியாக விற்பனை செய்யப்படுகிறது. மேலும், பேட்டரி மூலம் இயங்கும் புதிய வாகனங்கள் பூங்காவிற்குள் போக்குவரத்திற்காக அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன.

கிண்டி – சிறுவர் இயற்கைப் பூங்காவில், 20 கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பூங்கா மறுவடிவமைப்பு செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்ட உணவு விடுதி, ஓலை வேய்ந்த கூரையுடன் கூடிய விலங்குகள் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு, பாதைகளும் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் மிகப்பெரிய வேடந்தாங்கல் பறவைக்கூடமும் (20 மீட்டர் உயரம்) அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய சிறுவர் நூலகம், செல்ஃபி பாய்ன்ட், மின்னணுமூலம் நுழைவுச் சீட்டு வசதி மற்றும் பார்வையாளர் வசதிகள் ஆகியவையும் மேம்படுத்தப் பட்டுள்ளன.

சேலம் - குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில், மேம்படுத்தப்பட்ட பல்நோக்கு விளக்கம் அளிக்கும் மையம் (interpretation centre), குழந்தைகள் விளையாடும் பகுதி மற்றும் மான் இருப்பிடங்கள், சிசிடிவி கேமராக்கள், பலப்படுத்தப்பட்ட எல்லை வேலி, மேம்படுத்தப்பட்ட பார்வையாளர் வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேலூர் - அமிர்தி உயிரியல் பூங்கா, சக்கர நாற்காலிகள், உணவக வசதிகள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கழிவறைகள் போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், குரும்பப்பட்டி மற்றும் அமிர்தி உயிரியல் பூங்காக்களில் விலங்குகளின் வாழ்விடங்கள் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி - சிறுவர் இயற்கைப் பூங்கா, சேலம் - குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, வேலூர் - அமிர்தி உயிரியல் பூங்கா ஆகிய பூங்காங்களின் மேம்பாட்டிற்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.

இக்கூட்டத்தில், உயிரியல் பூங்கா நிர்வாகத்தின் தரத்தை உயர்த்திடவும், விலங்குகளின் நலனை உறுதி செய்திடவும், பொதுமக்களிடம் வன விலங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சுற்றுச்சுழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர். ராகுல்நாத், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## இன்று 13 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,அக்.7-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (07.10.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-12ல் காலடிப்பேட்டை, தாங்கல் சாத்துமா நகர், சாத்தாங்காடு நெடுஞ்சாலையில் உள்ள தூய பவுல் மகாஜன மேல்நிலைப் பள்ளி, மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-22ல் தேவராஜன் தெருவில் உள்ள சமுதாயக் கூடம், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-47ல் கொருக்குப்பேட்டையில் உள்ள ஏ.ஈ.எம் பள்ளி மைதானம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-59ல் பல்லவன் சாலை, தீவு மைதானத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-71ல் நெல்வயல் சாலையில் உள்ள கீழஈரால் கம்மவர் திருமண மண்டபம், அம்பத்தூர் மண்டலம்

(மண்டலம்-7), வார்டு-84ல் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், டாஸ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், 3வது மெயின் சாலையில் உள்ள பி.எஸ்.பி. கன்வென்ஷன் ஹால்,

அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-102ல் செனாய் நகர், ஏ பிளாக் 12வது தெருவில் உள்ள அம்மா அரங்கம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-121ல் மயிலாப்பூர், இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இராணி மேரி கல்லூரி, கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-138ல் எம். ஜி.ஆர் நகர், பச்சையப்பன் பிரதான சாலையில் உள்ள அஞ்சலி மஹால், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11),

வார்டு-155ல் இராமாபுரம், இராயாலா நகர் பிரதான சாலையில் உள்ள வள்ளி வடிவேலன் திருமண மண்டபம், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-159ல் மீனம்பாக்கம், காமராஜர் சாலையில் உள்ள ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி, அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-177ல் வேளச்சேரி, காந்தி சாலையில் உள்ள சேவா நகர் சமுதாயக் கூடம், பெருங்குடி மண்டலம் (மண்டலம்-14), வார்டு-182ல் கந்தன்சாவடி, ராமப்பா நகர், சர்ச் பிரதான சாலையில் உள்ள செயின்ட் பயஸ் எக்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி ஆகிய 13 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி, அண்ணனூர் மக்காக் மஸ்ஜித் (பள்ளிவாசலில் மிலாடி நபி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் ஆவடி மேயர் ஜி.உதயக்குமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், சிறுபான்மையினர் நல உரிமை மாநில இணைச் செயலாளர் சி.ஜெரால்டு ஆவடி கிழக்கு பகுதி கழக செயலாளர் பேபி சேகர், நிர்வாகிகள் சுதாகர், சர்புதீன் உள்ளனர்.